# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க,*
## *குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை*
## *(திருத்தச்) சட்டம்*

---

*(2018 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, மே மாதம் 25 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2018 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[2018 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது]

ச.வ.- ஓ 42/2016

### 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப்பெயர்.

**2.** 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படு கின்றது என்பதுடன், அச்சட்டத்தின் 122அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 122அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

"பன்னிரண்டு வயதினையுடைய அல்லது பன்னிரண்டு வயதிற்கு மேற் பட்ட அத்துடன் பதினான்கு வயதிற்குட்பட்ட பிள்ளை யொருவரினால் புரியப்பட்டுள்ள தாக சார்த்தப் பட்ட தவறொன்றின் விடயத்திலான மருத்துவப் பரிசோதனை.

122அ. (1) பன்னிரண்டு வயதினையுடைய அல்லது பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட அத்துடன் பதினான்கு வயதிற்குட்பட்ட பிள்ளை யொருவரினால் புரியப்பட்டுள்ளதாக சார்த்தப்பட்ட தவறொன்றினைப் புலனாய்வு செய்கின்ற பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் அத்தகைய பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் சம்மதத்துடன்,-

(அ) சார்த்தப்பட்ட தவறின் தன்மையையும்விளைவு களையும் கவனத்துட்கொண்டு, அத்தகைய பிள்ளையின் பொறுப்புடைமையினது அளவையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய பிள்ளைக்கு ஏதேனும் சிகிச்சை முறையிலான இடையீடு தேவையாகவுள்ளதா என்பதையும்,

2-PL 010734 - 977 (2018/04)

அவ்வழக்கில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் முடிபுசெய்வதனை இயலச்செய்கின்ற போதியளவு புரிந்துணர்வு முதிர்ச்சியை அத்தகைய பிள்ளை எய்தியுள்ளாராவென்பது பற்றிய அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கென, (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நிபுணர்களைக் கொண்டுள்ள பல்துறைநெறிசார் குழுவினரினால் அவர் பரிசோதிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பல்துறைநெறிசார் குழுவினர் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) இயைபான மாவட்டத்தின் சட்ட மருத்துவ அலுவலரொருவர்;

(ஆ) குழந்தைப் பருவத்தினருக்கான அல்லது இளம் பருவத்தினருக்கான உளநோய் மருத்துவரொருவர்; அத்துடன்

(இ) உளவியலாளரொருவர்.

(3) பிள்ளையின் அத்தகைய பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிள்ளையை அவ்வாறு பரிசோதிக்கப்படுவதற்கு சம்மதிக்காதவிடத்து, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவ்வழக்கில் நியாயாதிக்கம்கொண்ட நீதிவானுக்கு அத்தகைய பிள்ளையைப் பரிசோதிப்பதற்கு அத்தகைய பல்துறை நெறிசார் குழுவினருக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றுக்கென விண்ணப்பித்தல் வேண்டும்.

(4) இயைபான மாவட்டத்தின் சட்ட மருத்துவ அலுவலர் கிடைக்கக்கூடியவராகவிராத ஏதேனும் பட்சத்தில், தவறைப் புலனாய்வு செய்கின்றவரும் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ளவருமான அலுவலர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு வேறேதேனும்மாவட்டத்தின் சட்ட மருத்துவ அலுவலரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(5) அத்தகைய பல்துறைநெறிசார் குழுவினர், பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அவர்களின் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும். அவர், தண்டனைச் சட்டக் கோவையின் 76 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு நீதிவான் தனது அபிப்பிராயத்தைக் கொள்வதற்கும் முடிபை மேற்கொள்வதற்கும் அவருக்கு உதவுவதற்கென நீதிவானுக்கு அத்தகைய அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பிள்ளையானது, குழந்தைப்பருவத்தினருக்கான உளநோய் மருத்துவரொருவர் மற்றும் உளவியலாளரொருவரின் மேற்பார்வையின்கீழும் மதிப்பீட்டின்கீழும் விதித்துரைக்கப்பட்ட முறையில் புனர்வாழ்வளிக்கப்படுவதற்கு அமைந்தவராதல் வேண்டும்.”.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை “பிரகாசன பியச”, அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*